**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 1524/அ5/2024, நாள்.21.05.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – 2023–2024ஆம் நிதியாண்டு அனைத்து அரசு பள்ளிகளுக்கு பள்ளி மானியத் தொகை (Composit School Grant / SIM for TABLET June 24) இரண்டாம் கட்டமாக மீதமுள்ள 50% மானியத் தொகை வழங்குதல் – அனைத்து அரசு பள்ளிகளுக்கு பள்ளி வங்கி கணக்கில் RTGS மூலம் செலுத்தப்பட்டுள்ளது – தொடர்பாக

பார்வை
1. மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.08/A12/ஒபக/2023, நாள். 11.09.2023 மற்றும் 01.04.2024
2. வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.1438/மாஓ6/CSG/ஒபக/2023–2024, நாள். 21.09.2023
3. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகள் ந,க,எண்.20932/சி4 /இ1/2024, நாள். 15.04.2024
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 26.04.2024

.....

மத்திய கல்வி அமைச்சகத்தின்திட்ட ஒப்புதல் குழு 2023–2024ம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ் தொடர் செலவினத்திற்காக UIDSE 2021–22ன்படி பள்ளி மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பள்ளிகளுக்கு பள்ளி மானியம் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. பார்வை 1–ல் காணும் மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகளின்படி 50 சதவீதம் பள்ளி மானியம் ஏற்கனவே ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக விடுவிக்கப்பட்டது. பார்வை 3–ல் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகளின்படி இரண்டாம் கட்டமாக மீதமுள்ள 50 சதவீதம் அனுமதிக்கப்பட்ட பள்ளி மானிய தொகையினை அனைத்து அரசு பள்ளிகளுக்கு வழங்க தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 4ன் படி இவ்வலுவலக கடிதம் மூலமாக அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளின் வங்கி கணக்கில் RTGS மூலமாக செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிதியினை ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ள Tablet–க்கு தேவையான SIM–ற்கான ஜூன் –2024 மாதத்திற்கான தொகையினை மட்டும் (ரூ.110/– மட்டும் ஒரு ஆசிரியருக்கு) பள்ளி மானியத்திலிருந்து மேற்கொள்ளவும், பள்ளி மானியத் தொகையினை பார்வை 1–ன் படி 11.09.2023 நாளிட்ட கடிதத்தில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் மற்றும் முன்னுரிமை தவிர வேறு எந்த செயல்பாடுகளுக்கும் பயன்படுத்தாமல் உரிய காலத்திற்குள் நிதியினை பயன்படுத்த அனைத்து அரசு பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இது சார்ந்து செலவின விவரங்கள், அதற்கான பற்றுச்சீட்டுகள் பராமரிக்கப்பட வேண்டும். செலவினம் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பயன்பாட்டுச் சான்றிதழ் (UTILIZATION CERTIFICATE) கோரும் போது சமர்பிக்க ஏதுவாக தயார் நிலையில் வைத்திருக்க அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய தொடக்க / நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – பார்வை 1–ன்படி

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்–

1. சென்னை –6, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட கல்வி அலுவலர்கள் ( தொடக்கக் கல்வி / இடைநிலைக் கல்வி ) வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)